

# சொல்லில் உறைந்து போதல்

முல்லை முஸ்ரிபா



...அறியட்டும் அவன்
என்னிடமும் வன் சொற்களுண்டு
எறிந்தால் பொசுங்கிடுவான்
எனினும் எறிவதில்லை
ஏனெனில் நான் மனிதன் என்பதனால்

**அவாவுறும் நிலம் (2009)**



... இனி யென் செய்தல் தகுமென
மனமலறித் துடிக்குங்கால்
ஆத்மாவுக்குள் நுழைந்து
மெல்லெனச் சாந்தி சொல்லும்
என் கவிதைகள்

**இருத்தலுக்கான அழைப்பு (2003)**

முல்லை முஸ்ரிபா

# சொல்லில் உறைந்து போதல்

காலமும் காலநிமித்தமுமாக உயிர்த்தெழும் கவிதைகள்

●**சொல்லில் உறைந்து போதல்** ●கவிதைகள் திரட்டு ●முல்லை முஸ்ரிபா ●●மஃரிபா மஃஸீர் ●தண்ணீரூற்று, முள்ளியவளை, இலங்கை ●முதற்பதிப்பு: ஜூன் 2014 ●பக்கங்கள்: xii+108 ●தாள் அளவு: 18x12cm ●பக்க வடிவமைப்பு அம்ரா கிராபிக்ஸ், கிண்ணியா (0775153943) ●அச்சுப் பதிப்பு: சிசார பிரின்ற் வே ●வெளியீடு: வெள்ளாப்பு வெளி, 391B, பறகத் மஹால், ஜயந்த வீரசேகர மாவத்தை, கொழும்பு 10, இலங்கை ●வெளியீட்டு எண்: 003

●**Sollil Urainthu Pothal** ●Collection of peoms ●By Mullai Musrifa ●●Mahrifa mahzoor - thanniyoottu, Mulliyawalai, SriLanka ●First Edition: June 2014 ●Pages: xii+108 ●Size: 18x12cm ●Lay-out Design: Amra Graphics & Printers, Kinniya (0775153943) ●Printed by: SISARA Print Way ●Puplication: Wellappuweli, 391B, Barakath Mahal, Jayantha Weerasekara Mawatta, Colombo- 10, Sri Lanka. ●Hotline: +94713077177 ●Email: mullaimusrifa@gmail.com ●**ISBN - 978-955-0280-03-2** ●Price: 300.00

வெள்ளாப்பு வெளி

வடிவமற்ற ஒவ்வொன்றும் தனக்கான வடிவத்தைத்
தேடிக்கொண்டேயிருக்கும்

ஆதலினால் உணர்வலைகளில் துடித்தபடி உள்ளே
அலைந்து திரிகிறது ஒரு சொல்




என் கவிதைச் சொல்லின்

அட்சரமான

மனைவி மஃரிபா பேஹம்

உச்சரிப்பான

செல்வங்கள் அஹ்மத் ஷௌகி மிதா மர்யம்

ஆகியோரின்

உச்சமான அன்புக்கு

## புலரிச் சொற்கள்

முல்லை முஸ்ரிபா ஈழத்துக் கவிதைச் செல்நெறியின் முக்கிய செலுத்து புள்ளிகளில் ஒருவர்.

வதைபட்டுச் சிதைகிற வாழ்வின் மீதான கவிதைகளான 'இருத்த லுக்கான அழைப்பு' (2003) மண்ணின் சிறகுகளால் பறத்தல் பற்றிய கவிதைகளான 'அவாவுறும் நிலம்' (2009) ஆகிய திரட்டு களைத் தந்தவர்.

என் மனசின் வரைபடம், எஞ்சியிருக்கும் சிறகுகளால் பறத்தல், மண்ணிறத்தவன் கவிதை ஆகிய திரட்டுகளைக் கைவசம் கொண்டுள்ளார்.

தேசிய சாகித்ய விருது (2004), கொடகே தேசிய விருது (2010), தேசியசாகித்யசான்றிதழ் (2010), வடக்குகிழக்குமாகாண இலக்கிய விருது (2004), வடமாகாண இலக்கிய விருது (2010), இளம்படைப் பாளிக்கான கௌரவ விருது (2002), வன்னிச் சான்றோர் விருது

(2006), யாழ் முஸ்லிம் இணையத் தளத்தின் மூத்த படைப் பாளிக்கான சிறப்பு விருது (2011) என்பவற்றை முஸ்ரிபாவின் கவி தைகள் சூடியுள்ளன. முஸ்ரிபா இலக்கியப் புலத்தில் படைப்பாளர், கவிதைத் திறனாய்வாளர், பத்தி எழுதுநர், இலங்கை வானொலி யின் ஒலிபரப்பாளர் என ஒரு பக்கமும், கல்விப்புலத்தில் அதிபர், விரிவுரையாளர், வளவாளர், முதன்மை ஆசிரியர், பாடநூலாக் குநர் என இன்னொரு பக்கமுமாக வினையாற்றுகிறார்.

கவிதைகளில் உறைந்து போன முஸ்ரிபாவின் பேனா மனம் சொல்லில் உறைந்து போய் துடித்தெழும் கவிதைகளாக வெளிப் படுகிறது.

முல்லை முஸ்ரிபாவின் பேனா மேலும் பிரகாசிக்க வெள்ளாப்பு வெளி பிரார்த்திக்கின்றது.

வெள்ளாப்பு வெளி
*2014 ஜூன் 28*

## சொல்லிருந்து வெளியேறுதலும் அதனிடம் தஞ்சம் கிடத்தலும்

கவிதையில் வாழுதல் அல்லது வாழ்தலின் கவிதை என்பது என் னளவில் ஆத்மாவின் துடிப்பாய் இருப்பதனால் அடிக்கடி சொல்லில் உறைந்து போகிறேன். அல்லது சொற்கள் எனக்குள் உறைந்து போகின்றன.

அத்தகைய சொல்லில் கிடக்கும் போது கவிதையாய் ஊறத் தொடங்கி விடுகிறேன். அத்தகைய ஊற்றிலிருந்து வெளியேறும் போது கவிதையாய் ஊரவும் முடிகிறது.

கவிதை என்பது வெறும் சொல்லல்ல அது இரத்தத்தின் சொல்; வியர்வையின் சொல்; கண்ணீரின் சொல்; சிதழின் சொல்; சில வேளை பன்னீரின் சொல், மண்ணின் சொல்லும் கவிதை தான்.

சொற்களின் வெளி அரூபமானது; சூட்சுமம் நிறைந்தது; வசீகரமா னது; வியாபித்துப் பீறிட்டெழுவது; உணர்வில் பொங்கிப் போவது.

அத்ததகைய சொற்களுக்குள் அடைபட்டுக் கிடத்தல் என்பதும் மற்றவர்களால் வீசப்படும் சொற்களுக்குள்ளும், சொற்களுக்குப்

பின்னாலுமான நிலைவரம் குறித்தும் நான் என் சொல்லளவில் மௌனித்து உடைந்து கிடத்தல் என்பதும் சொல்லற்ற வெளியை எனக்குள் கட்டமைப்பதுண்டு.

எனினும் உணர்வில் பொங்கும் அத்தகைய சொற்களைப் பொறுக்கி பக்குவம் கெடாமல் அடைகாத்து குஞ்சுகளாய் பறந் தெழும் தருணங்களில் மீண்டும் அத்தகைய சொற்களிடமே தஞ்சம் கிடக்கிறது என் மனசு.

சொல் சிறகாகிறது. சொல் பெருவெளியாகிறது.

*சொல்லிருந்து சிறகெடுத்தபடி*
*முல்லை முஸ்ரிபா*
*2014 ஜூன் 30*

## நன்றியில் உறைதல்

- பின் அட்டைக் குறிப்பு கவிஞர் சிவசேகரம்
- அட்டை வடிவமைப்பும் தளக்கோலமும் அம்ரா கிராபிக்ஸ்
- என் அன்புக் குழந்தைகள் அஹ்மத் சௌகி, மிதா மர்யம் உள்ளிட்ட குடும்ப உறவுகளுக்கும்
- கவிதைகளின் உறைவிடங்களான...
  - விடிவெள்ளி (சொல் புதிது, ஆறாம் விரல்) - அல்ஹஸனாத் - தினகரன் - மீள்பார்வை - எங்கள் தேசம் - கலைக்கேசரி - படிகள் - மல்லிகை - தமிழ் நயம் (றோயல் கல்லூரி ஆண்டு மலர்) - இலக்கிய மஞ்சரி (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், முஸ்லிம் சேவை) என்பவற்றுக்கும்
- என் கவிதைகள் குறித்து அறிமுகக் குறிப்புகள் எழுதியவர்கள், ஆய்வுக்கு உட்படுத்தியவர்கள், எதிர்வினையைப் பதிவு செய்தவர்களுக்கும்
- வெள்ளாப்பு வெளியோடு இணைந்து செயலாற்றுவோருக்கும்
- என்னிடம் எப்போதும் கவிதை கேட்பவர்களுக்கும்
- மனிதமுள்ள முகங்களுக்கும் என் நன்றியின் உறைவிடம் உரியது
- மீதமிருக்கும் ஒரு நன்றி எப்போதும் போலவே என்னை வருத்தும் முட்களுக்கும் வருடும் பூக்களுக்கும் சொந்தமானது

## சொல்லில் உறைதல்

உயிர்ப்பு-1 **1**. காலத்தைக் கூவுபவன் **2**. ஜனநாயகம் அல்லது வைன்கொடுக்கப்பட்டபொம்மை**3**. பூர்வீகத்தின்வசீகரம்**5**. தேர்தல் குறித்தான குறுஞ்செய்தி மூன்று **7**. வண்ணத்துப் பூச்சிகளால் நிரம்பியிருக்கும் வீடு **9**. உடைகிறது அவாவும் மனசு **10**. மரணம் எனும் வீடு **11**. நித்தியமற்ற அமைதியின் பயங்கரம் **13**. அரவம் மாதிரிப்படம்**14**. வாய்வறண்டபாலைவனம்வார்த்தைபாறாங்கல் **16**. ஆரியவதி: இருபத்தைந்தாம் சிலுவை **18**. புல்லாங்குழலில் நரம்புகள் உயிர்த்தன **20**. தொண்ணூற்றொன்பதாவது செல்வழி அழுத்தவும் கிருமிகள் வெளிப்படும் அறை **22**. மனம் கண்டல்காடு **24**. நிலமும் நிலம் நிமித்தமுமான திணைக் கவிதைகள் ஐந்து **26**. சூழப்பட்டவன் கவிதை **33**. வாழ்தல் எனும் புதிர் **35**. நேரமின்மையின் வாசிப்பு **36**. குழிவெட்டுபவனின் புராணக் கதை **38**. நுரைத்து நுரைத்து **40**. பனிமொழியில் உறையும்

பறவைகளின் நாளைய பாடல் **41**, நான் எறும்புகளின் இனிப்பு **43**, மனசைச் சுற்றின **45**, ஆரஞ்சுப் பழம் **46**, தூசு **47**, அடைக்கும் தாழ் **49**, மேய்ந்து திரிகிற காடு **51**, நான் நதியாகி நடத்தல் **53**, அந்நியமாதல் **55**, யன்னல் கண்ணாடி **57**, என்னைத் துரத்திய சாத்தானின் மரணம் **58**, தும்மி **60**, காலம் குறித்து மூன்று குறுங்கவிதைகள் **61**, மகன் **63**, தாயன்பைப் பாடுதல் **64**, மனம் தேக்கம் காடு **67**, என் மீது ஏவப்பட்ட பிசாசுகள் **69**, எச்சங்களில் உயிர்க்கும் கவிதை **71**, நசிவுகள் **73**, கடலருகு ஊரிழந்த படகு நிலக்காரன் **75**, நெரிசலில் **78**, வெள்ளை நிறத்தின் மரணம் **79**, அலைகளை வாசிப்பவள் பற்றிய காற்றின் குறிப்பு **81**, மரமேறிகள் **84**, பேரீச்சம்பழத்தின் முறை கேடற்ற வாக்குமூலம் **86**, காற்றும் மௌனித்த **88**, வர்ணங்கள் உறிஞ்சும் நிலவு **89**, அபேபாலவின் பேனா பீச்சிய புதிய புராணக் கதை **91**, வெற்றுக் கலசமாகி **94**, இசைத்தல் மரத்துப் போன பியானோ **95**, வன்முறையால் நிழற்றப்படும் பொழுது **96**, ஊதா நிறப் பூக்கள் **98**, வனாந்தரங் களில் பசித்தலையும் காதல் **99**, முரசம் **100**, கழுத்தை நெரித்துக்கொள்பவன் **101**, தொப்பி வியாபாரி **104**, துப்பாக்கிகள் வர்ணந் தீட்டுகின்றன **105**, மௌனத்தின் பூட்டுக்களால் **107**, உயிர்ப்பு-2 **108**

## உயிர்ப்பு 1

உம்மம்மாவின் கண்கள்
குழி விழுந்து பஞ்சையாயின
அருகிருக்கும் பொருளையோ குரலையோ
அடையாளம் காண முடிவதில்லை அவளால்
ஆனாலும்
ஆலடிச் சந்தியில் தொடங்கி
அதனது உயிர்ப்புச் சிதறாமல்
ஊரினது ஈர வரைபடத்தை
முழுதாய் கவ்வியிழுத்து வருகின்றன
அவளது முகத்திலும் அகத்திலுமான
உணர்வின் ரேகைகள்
என்
கண்களுக்குள்
வெளியாயின

2009 ஒக்டோபர் 20

## காலத்தைக்கூவுபவன்

வியாபாரத்தைக் கூவுபவன்
வியர்வையால் நிரம்பியிருக்கிறான்
நம்பிக்கைச் சுடர் கண்களிலெரிய
நாளைக்கான நிமிசத்தை விதைக்கிறான்
அயர்ந்துபோகும் ஜீவிதப்பிடிப்பை
தன் மதலையரின்
சிரிப்பொலி கொண்டு களிப்புறுகிறான்
குழந்தையரின்ரூபம்
தன் வரைபடத்தில் விரிய
வியாபாரத்தை உற்சாகமாய் கூவியபடி
மீண்டும் மீண்டும் அலைகிறான்
அவனது கூடையில் வழிகிறது
இல்லாமையின் உள்ளமை

2009 நவம்பர் 04

## ஜனநாயகம் அல்லது
## வைன்கொடுக்கப்பட்ட பொம்மை

ஆலாபனைகளோடு ஆட்டம் தொடங்கிற்று
வைன் கொடுக்கபட்ட பொம்மை
வலய நிற்கும் தலைகளும் ஆடுகின்றன
அல்லது ஆட்டப்படுகின்றன.

உன் பழுக்கேறிய புனித கைகளில்
பொம்மை ஆடுவது கண்டு
வியக்கின்றனர் சிலர்
கொரூரமெனக் கொதிக்கின்றனர் வேறும் சிலர்
அதுவொரு பொழுதுபோக்கென
ரசித்துவிட்டு விலகுகின்றனர் இன்னுஞ் சிலர்

பொம்மை

அறுபத்து ரெண்டு ஆண்டுகளாயும்
விதவிதமாய் கூத்துக் காட்டுகிறது
அது வைன் கொடுப்பவரின் கலை
என்கிறேன் நான்.

சட்டென்று
அதி நவீனமாய் ஆட்டம் தொடங்கிற்று
மந்தைகளாயின லட்சம் தலைகள்

நானும்
வைன் கொடுக்கும் பொம்மையை
பரிசுத்த கரங்களில் ஏந்துவேன் எனில்
எல்லாத் தலைகளும் பொம்மைகளாகும்.

2009 டிசம்பர் 05

## பூர்வீகத்தின் வசீகரம்

நிலமும்
நிலத்தின் மீதெழும் தீராக் காதலுமாக
அடர்வன இருள் பிழிந்து நடந்தேகுகிறேன்
இன்னும் ஈர விழிகளுக்குள்
ஆழ் விரிபடமாய் மண் மேவுகிறது
மனம்

நெடுந்தூசெழுந்து அலைகிற காற்றிலும்
தேடுகிறேன் பூர்வீகத்தின் ரேகை
காய்ந்து சருகெழுந்து படர்கிற
வரட்சியின் கொடியில்
தளிர் ஈரம் பற்றியதான கனவுகள் பூக்கின்றன

மண்ணைக் கிளறுகின்றேன்
வேர் நீண்ட காலடியின்

ஆதிச் சுவடும் எழுந்து
என் நரம்புகளில் பொங்குகிறது
மேலும் கண்களுக்குள் அகல விரிகிறது
பூர்வீகத்தின் அதீத வசீகரம்
ஏழாயிரத்து அறுநூற்றுச் சொச்ச நெடுநாட்களின்
பின்னொரு பொழுதில்
எனது சூரியன்
நீராவியில் முகம் கழுவிற்று

விடியலை அள்ளி முகங்களில் அப்பும்
முகமற்ற முகங்களில்
அழகு வழிந்தோடிற்று

அதி வண்ண நிறப்பூக்களும் நீயுமென
கனவுகள் என்னுள்
வியாபிக்கத் தொடங்கின.

2010 ஜனவரி 01

# தேர்தல் குறித்தான குறுஞ்செய்தி மூன்று

i.+94721360320

தேர்தல் காலத்து வன்மம்
ஜனநாயகத்தின் மேனி மீது நிகழ்ந்திற்று
சிம்மாசனப் போரில்
நான்கு கால் அராஜகத்தின் கீழ்
நசுங்கிக் கிடக்கிறது மனிதாபிமானம்

20: 10: 05
25.01.2010

ii.+94722140494

இடதுகைச் சின்னி விரலின்
மை உலரும் முன்னமே

குருதி தோய்ந்த ஜனநாயகத்தின் மீது
வெட்கிக் குரல் கிழிந்து விழுகிறது
சுதந்திர கீதம்

00:00:00
04.02.2010

iii.+94718275166

காசு வெறும் வெடிப்பொலியாய்
கோடி கோடியாய் உதிர
தெருமருங்கும் குச்சொழுங்கையும் தூசாகிறது.
மாலையும் வாட்டமுற நுழைகிறது
பதினாயிரம் கால்களும் வால்களுமாய்
பல்லாயிரம் பொய்ச்சூளுடன்
பேய் முகமூடியணிந்த ஜனநாயகம்

17:15:10
22.03.2010

# வண்ணத்துப் பூச்சிகளால் நிரம்பியிருக்கும் வீடு

அறை முழுவதும்
வண்ணத்துப் பூச்சிகளின் படபடப்பாயிருந்தது
அதீத அழகோடும்
மெல்லிய சுகந்தத்தோடும் பூரித்தப் போயிற்று அறை
வண்ணப் பூச்சு சுவரில்
வண்ணத்துப் பூச்சிகளிலொன்று
தன் சிறகுத் தூரிகையால் கவிதை வரைந்திற்று
கவிதையை மொய்த்து
அழகழகான பூக்கள் விரிந்தன
பூக்களை வருடின இருஜோடி வழிகளில்
இப்போது ஈரலிப்பு

சாளரத்தின் வழியே வெளியெங்கும்
கருகிய சருகுகளாய் அலைகிறது
காலம்

2010 ஏப்ரல் 01

## உடைகிறது அலாவும் மனசு

குழந்தை குவளைக்குள்ளிருக்கும்
வர்ண ஜாலங்களை ரசிப்பூட்டுகிறாள்
கண்களை விரித்து அவாவித் தவிப்புறுபவள்
குவளையைத் திறப்பதற்கு முயன்று தோற்கிறாள்
துயர்கின்ற விழிகளுக்குள்
மேலும் வர்ணம் காட்டுகிறது
நிறமணிகள்
மணிகள் மீதான தீராத காதலில்
மனசு பூரித்துப் போக
கைகளை அசைத்து வியப்பூட்டுகிறாள் குழந்தை
விழுந்து உடைகிற குவளையில்
சிதறுகிற மணிகளைச் சேகரிக்க முடியவில்லை அவளால்
அவை
அவளது எல்லை கடந்து உருண்டு கொண்டிருக்கின்றன
வர்ண நிற மணிகளாய் மீண்டும்
குவளையில் அடைக்கப்படுகிறது
காலம்

2010 ஏப்ரல் 15

## மரணம் எனும் வீடு

வெளியே அலைகிறேன்
சின்னதாய் தென்றல் தொட்டது தொடக்கத்தில்
மறு பொழுதில்
புயல் தூக்கிவாரிச் சுழற்றிப் போட்டது
கனம் தடுமாறியது உறுதி

நிழல் சிறுவேளை ஆறுதல்
சந்தோசிப்பில் பூத்தது மனசு
வெயில் வெறும் வெப்ப வெளியாய் இறங்கிற்று
என் மீது
கால்கள் நிலம் தொடாவண்ணம்
மீண்டும் அலைவு தொடங்கிற்று
நிழலிருப்பு

ஏமாறுதலின் நுனியில்
இருள் மூடிய மேகத்திரையின் கீழான
இரைகிற இடியுடை மழையென
நனைகிறது காலம்
பெருக்கெடுக்கிறது இதயத்தின் மீதான தவிப்பு

வெளியே அலையும் என்னை
வாசல் திறக்கிறது மகிழ்வின் வீடு
உள்ளிருந்து அழைக்கிறது பேறுகள்

2010 மே 01

## நித்தியமற்ற அமைதியின் பயங்கரம்

பூக்களால் மூடப்பட்டிருக்கின்றது பெரும் புதர்
பூக்களின் அழகிலும் அதீத வாசனையிலும்
உறைந்து போகின்றன புட்கள்
பூக்கள் மெல்ல வாடத் தொடங்கவும்
முட்களின் வேர்கள்
சிறகுகளைத் தின்னுகின்றன

அமைதி நிரந்தரமில்லையெனில்
அதன் உட்பொதிந்த பயங்கரம் குறித்தே
எப்போதும் துயரிக்கிறது காற்று

2010 ஜூன் 05

## அரவம் மாதிரிப் படம்

அநுபவங்களின் ரேகைகளால் இழைபடும்
இருப்பின் மீது
முட்கரங்கள் வியாபிக்க மேலெழுகிறது
அதி வன்மம்
மெல்லிய வார்த்தையும் புதைந்த மேட்டில்
கிண்டிக் கிளறிக் கொண்டிருக்கின்றன
நாயினது முன்னங்கால்கள்
நீயாகி

நான் இன்னும் மௌனியாகிறேன்

எல்லாத் துயரும் சூழ்ந்த புதரிடை
சிறுகளிப்பாய் பூவொன்று விரிகையிலும்
என்னிடம் வார்த்தைகள் பஞ்சமாயின

என் மௌனம் மகுடியாய் காண்கிறாய்
நீ
அதன் முன்
படமெடுத்தாடுகிறாய் அரவம் மாதிரி
முதிர்ந்த பேரிகைகளில் பிரவாகிக்கிறது
இசை
தீ

2010 ஜூலை 20

## வாய் வறண்ட பாலைவனம்

## வார்த்தை பாறாங்கல்

வறண்ட பாலைவனமானது
வாய்
தொண்டைக் குழியின் ஈர ஊற்றும் வற்றிற்று
கடலும் போதாத் தாகத்தில்
கொதிக்கிறது நாவு நீண்டு
விழிகளுக்குள் ஆயிரம் அர்த்தங்கள் புதைந்து
மருளுகிறது பொழுது

வார்த்தையொன்றையேனும் பொறுக்குதற்கு
உசுப்பிவிட்ட மரத்தின் கீழ் நிற்பதான
எதிர்பார்ப்பில் ஏமாந்து போகிறது
அன்பிலூறிய சுற்றம்

பாலைவனத்தின் வழியில்
சில கழுகுகள் தேடுகின்றன
குருவியினது குதூகலத்தை

ஈரமனசினடியில் பொதிந்ததான
எழில் சொற்களை
நான் எவ்வண்ணம் இயம்புவேன்
பாறாங்கல்லாய் அழுத்துகிறது
தொண்டையில் சொல்

2010 ஆகஸ்ட் 01

## ஆரியவதி: இருபத்தைந்தாம் சிலுவை

விழுந்து சிதறுண்ட
கண்ணாடிக் குவளையென மனம் வெடித்தாள்

அவளினது
ஆனந்தக் கனவுகள் நிரம்பி
வழிந்தன இரத்த நிறத்தில்

தீயாணிகளில் அறையப்பட்டன
அவளது வாழ்தலின் அவா
சுடுகம்பிகளாய் நரம்புகளில் ஓடின
அதிகாரத்தின் வெறித்தனம்
சர்வ கரிசனைகளோடுமா
அவள் எஜமானிய வதைக்குள் வாழ்வு தொலைத்தவள்

குந்தச் சிறு நிழலும் ஈயா தன் தேசம் துரத்தியதில்
சகாராவுக்குள் முகம் குப்புற விழுந்தவளில்
அடங்க முடியா வலி துடிதுடித்தது
இருபத்து நான்கு சிலுவைகளில் அறையப்பட்டாள்

ஆரியவதி
சிலுவைகளின் சிலுவையானாள்
இருபத்தைந்தாம் சிலுவை
இன்னும் காத்துக்கிடக்கிறது
நம்தேசத்தின் இயலாமையை அறையவுமாக
ஆணாதிக்கத்தின் வேர்களை ஒடிக்கவுமாக
வியர்வை உறிஞ்சும் அராஜகத்தை அழிக்கவுமாக
எவர் உளார் எம்வசம்

எனின்
இருபத்தாறாம் சிலுவை வேண்டியதில்லை.

2010 ஆகஸ்ட் 12

(மத்தியகிழக்குக்கு பணிப்பெண்ணாகச் சென்று துன்புறுத்தலுக்கு ஆளாகித் திரும்பிய சிங்களப் பெண் குறித்த செய்திகளை முன்வைத்து எழுதப்பட்டது)

## புல்லாங்குழலில் நரம்புகள் உயிர்த்தன

புல்லாங்குழலின் துளைகளில் உயிர்த்தன
நரம்புகள்
பூ இதயத்தின் உணர்வு இழைகளில்
பெருகிற்று அன்பின் தாகிப்பு

ஆழத்துயிலிலிருந்து மெல்ல அசைந்திற்று
உயிரின் மீதான உயிர்
பாசத்தின் எல்லை அடங்கா இசை கடல்
ஓசையெழுப்பி
முழுவதுமாய் சூழ்கிற்று ஆன்மாவுமாய்

குழந்தை புல்லாங்குழலில் நிரம்புகிறது
அன்பின் நாதமென

நிசப்தத்தில் இறுகிய வதனத்தில்
உயிர்த்துப் படர்கிறது
குழலிசையின் வல்லபம்

இமையா விழிகளுக்குள் துயரை மறைத்தவளின்
நெடுங் காத்திருப்பு தவிக்கிறது
தாய்மை நதியாகி

2010 செப்டம்பர் 05

(மரணப்படுக்கையில் கிடந்த இசைக்கலைஞனின் உயிரை அவனது மகளின் புல்லாங்குழலிசை மீட்டெடுத்த உணர்வுச் சம்பவத்தையொட்டி எழுதப்பட்டது)

## தொண்ணூற்றொன்பதாவது செல்வழி அழுத்தவும் கிருமிகள் வெளிப்படும் அறை

கிருமிகளினாலாகிப் போகிற வீடு முழுதும்
மனசு
கிடந்து புரள்கிறது

என்னைக் குழைத்தெடுத்து
தனது வடிவில் வடித்தெடுக்கிறது கிருமி
மூளைக்குள் குடியேறியே
சலவை செய்து
தனது பாத்திரத்தில் நிரப்பியெடுக்கிறது
எனக்கொரு முகம் பொருத்தி
சுயம் அழித்துப் போடுகிறது

தொண்ணூற்றொன்பதாவது செல்வழியை அழுத்தவும்
வர்ணமயமாய் உதிர்கின்றன
புதிய புதிய கிருமிகளும் நவீன பிசாசுகளுமாய்
வீடு முழுவதும் படர்கின்றன

மீள மீளச் செல்வழியை மாற்றவும்
புலனடைத்துக் கிடக்கிறது அறைகளினாலான வீடு

என்
கண் குழிகள் தோண்டிப் புகுந்தன
பெயரறியாப் பெரும் பாம்புகள்
செவிவழி நுழைகின்றன
கொடூர இரைச்சலுடன் பேய்களின் சாகஸங்கள்

கறையான் அரித்துப் போடுவது போல
எனது நேரத்தை சிதைத்து விடுகிற போது
பொழுதுகளற்றக் கரைந்து போகின்றேன்

நூறாவது செல்வழியும் திரையில் விரிய
வீடு முழுவதுமாய் இருள் கவ்விக் கிடக்கிறது

2010 ஒக்டோபர் 10

## மனம் கண்டல்காடு

அதிபொழுதொன்றில்
எங்கள் பூர்வீகத்தினுள் புகுந்தன கருங்குரங்குகள்
வேரோடிய நம் சுவடுகளை
அழித்தலின் வெறி
குரங்கு முகங்களில் வழிந்தன

குரங்குகளின் துவக்குகள்
எங்கள் வாய்களுக்குள் நுழைந்தன
சிறு குடில்களையும்
தம் பூக்கைமாலையாய்
உதிர்த்தெறிந்தன

ஆதி ரத்தத்தில் பூரித்த நிலத்தின் மீதென
அராஜகக் கொடூரம் படரவும்
கண்களுக்குள் முள் ஏறிற்று

மீளவே முடியாச் சோகம் பெருந்துயர்
தீயிட்டதில் சாம்பலானது
மீள்குடியேறிய
நம் நம்பிக்கையின் அதிகுரலும் தீய்ந்து

உரித்துக்களை உரித்தெடுத்து
உரியாணமாக்குகிறாய் நீ
பழைய மசூதியின் இடிபாடுகளிடை
மூச்சற்றுத் திரிகின்றன
நம் உணர்வுகள் திசையற்று
மனம் கண்டல்காடு
பற்றியெரிகிறது
2010 நவம்பர்01

(2010.10.31 அன்று தீயிடப்பட்ட தம் பூர்வீகத்திலிருந்து துரத்தப் பட்ட கண்டல்காடு முஸ்லிம்களின் கண்ணீரின் வலிகளுக்காக எழுதப்பட்டது.)

**சொல்லில் உறைந்து போதல்**

# நிலமும் நிலம் நிமித்தமுமான திணைக் கவிதைகள் ஐந்து

## 01. முல்லைத் தலைவி

அன்றிலிருந்து
தலைவிரித்தலைகிறது காற்று
போர் முற்றி வெடித்துச் சிதறிய
எச்சங்களிடை அந்தரித்துத் திரிகிறது
அதிகாதல் பூத்த பூவரசின் நிழலில்
ஈரமுத்தங்களால் தழுவிப் பிரிந்த காட்சியை
கண்களுக்குள் மீளத்தேடுகிறது

வினைமுற்றி மீளாப்பொழுதுகள் நீளினும்
உலர்ந்தில
முத்தத்தின் அதி ஈரமும் துயரமும்

ஆயிரத்தோராவது கார்காலத்தின்
தேரொலிக்காகக் காத்திருக்கிறாள்
தலைவி

## 02. கடல் பறை

தோளில் திணவேற்றி
தோணியை தள்ளினான் செம்படவன்
ஆழியுள் திசை நோக்கிற்றுப் பரவை
பரவை காணக் குதூகலித்தது தோணி மனம்

தோணியது நீர்க்கால்ச்சுவட்டில்
கல்லெழுத்தாய் நீண்டது பெருங்கனவு

அம்மாறு எழுங்கால் கொதிப்படங்காச் செம்படவன்
சுக்கானை முறுக்கினான்
புயலெழினும் தாழாத் தோணியது
திசைகளும் கூடி வியந்தன
அலைகள் அடங்கா வெளியில்
கரையில் பொங்கிற்று குருதி
தாழம்பூவின் வாசத்தில்
நஞ்சேறிப் படர்ந்தது

கரைவலை இழுத்த பரதவரை
மூழ்கிற்று கடல் பெருந்திமிங்கலம்
எதிர்பாராக் கணத்தில்
கரையொதுங்கிற்றுத் தோணி
செம்படவன் மூச்சிழந்து கிடந்தான்
மாரடித்தது கடல் பறை

## 03. உழத்திப் பாட்டு

ஏர் பூட்டிய கால்களாய்
களனி தோறும் விதைந்து திரிகிறான்
திறந்து விடப்படாத வாய்க்கால்களில்
சிந்திய கண்ணீரால் பெருக்கெடுக்கிறது
வயல்வெளி
வரம்பேறி இரவுபகலென அலைகிறான்
பசி ஆத்தப்பறந்த வயலான் குருவிகளும்
பதறில் விழுந்து அந்தரிக்கின்றன
பொலிக்கொடியாய் உதிர்கிறது
அவன் மூதாதையர் வரைந்த வண்ணக் கனவுகள்

அதி கோடை நாளொன்றில் அவன்
வரம்போரம் சுடப்பட்டுக் கிடந்தான்
கட்டாக்காலி மாடு போல
சுட்ட திசையில்
அதி பயங்கரத்தின் தடம் வேர் நீட்டியது

அன்றிலிருந்து
வயல்வெளியில் அந்தரித்துத் திரிகிறது
உழத்தியின் பாட்டு

## 04. நந்தியாற்றுப் படை

பேரியாழின் மென் நரம்புகளாய்
நந்தி வெளி உயிர் மீட்டுகிறது
காற்றை வலித்தெழுகின்றனர் முல்லைப் பாணர்கள்
கண்களுக்குள் திசை எழுந்து நிற்கிறது
கலங்கரை விளக்கம்
இருள் கவிந்த தேசத்தை கழுவவுமாக

ரத்த நிறத்தில் விரிகிறது நந்திக்கடல்
பிறகும்
நசிந்து போன நரம்பின் குரலில்
முல்லைப் பாணர்கள் இசைக்கத் தொடங்கினர்
முள்ளிவாய்க்காலிலும்
கேட்கத் தொடங்கிற்று ஒப்பாரி

சூரியனை ஊற்றிப்பாடும் ஆவலில் பூத்த
ஆயிரமாயிரம் பாணர்கள் நந்தியுள் அழிகின்றனர்
நரம்புகளில் ரணம் சொட்டச் சொட்ட
மீண்டும் சிவக்கத்தொடங்கியது
மண் நிறத்தின் இசை

இனி எப்போதும்
முல்லைப் பெருவனத்திலும்
முடமாகிப்போன முகங்களிலுமாக
அலைந்து திரிகிறது பெருஞ்சோகம்

## 05. கொடி நிலம்

நிலம் வேரூடி பாதச்சுவடுவழி
கொடி படர்ந்து விரிகிறது
நெஞ்சிலும் தொப்புள் கொடியிலுமாக
பூவும் காயுமென நினைதல்கள்

முள் கவிகிறது கனவில் நெடிதாய்

நிலத்தினது நிறக்கொடி
கொடிது
காலடியில் கசங்குவது
அதனது லட்சணங்களை வரைகையில்
மீளவும் கரைந்தழிகிறது
எப்போது வெல்வது அதனது பறப்பு

கொடியேற்றிக் குதூகலிக்க
கம்பத்தின் நிழலில் அயர்ந்திருக்கும்

லட்சோப லட்ச விழிகள்
காலத்திடம் இரந்தன ஒரு சுபசோபனப் பாடல்

ஆடைகளை உலர்த்திப்போடுது போல
வரலாற்றைக் காயவிட்டிருக்கிறது காலம்
நிலம் கொடி அதன் தொப்புள் கொடியில்
உயிர்க்கிறது
எதிர்காலத்தில் மீதெழும் தீராக் காதல் வாகைப்பூ

2010 நவம்பர் 21

# சூழப்பட்டவன் கவிதை

∴பேன்

தன்வட்டத்தில் வேகமாய்ச் சுழல்கிறது
சாளரத்தை தகர்த்தி
உள்நுழைய முடியா
வெளியெங்கும் உலாத்திய காற்றின் எச்சம்
இருள் மிகு அறையைச் சூழ்கிறது
நுளம்பு வலை மொய்த்த
கிணுகிணுப்பில் சங்கீதம் குடிக்கிறது ரத்தம்
அருந்திக் கழுவா பால் கோப்பையில்
ருசிக்கும் எறும்புகள் எனக்குள் ஊர்கிறது
ஒளி சிறுத்த மேசையிலும் அடுக்குகளிலுமாய்
ஆழ்மன அடையாளங்களோடு கிடக்கின்றன
வாசித்தல் வாய்க்காப் பொழுதின்
பொக்கிஷங்கள் ஒரு தொகை

அயரமுடிவதேயில்லை
நாட்காட்டி உட்சுவரை அசைத்தரற்றுவதாயும்
கடிகாரம் அந்திமத்தின் மீது அறைவதாயும்
கண்டாயிற்று கனவு நூறு

பயங்கரமாய்ப்போன மனசின் இடுக்குகளில்
அதீத அமைதியின்கீழ்
ஆழ உறைந்து கிடக்கின்றன
ஆயிரம் கவிதைகள்

2010 டிசம்பர் 31

## வாழ்தல் எனும் புதிர்

ஒவ்வொருவரும் விடுகதைகளுடன் அலைகிறார்கள்
அவரவர்களின் கதைகளை அவிழ்ப்பதற்கு
அவரவரால் முடிவதேயில்லை
முயன்று தோற்கிறவர்கள்
மற்றவர்களின் புதிர்களை
நொடிக்குள் அவிழ்த்துப்போடுகிறார்கள்
ஆச்சரியம்
இன்னும் தான் முடிவதில்லை
தம்மை
விடுகதைகளிலிருந்து விடுவிப்பதற்கு

தவிப்புறுபவர்களின் மேல்
மேலும் மேலும் வியாபிக்கின்றன
விடுகதைகள்

2011 ஜனவரி 17

## நேரமின்மையின் வாசிப்பு

நேரத்தை துரத்துகிறது நேரமின்மை
நேரமின்மையைத் தின்னுகிறது நேரம்

சூரியனையும் இழுத்துக் கொண்டு அலைகையில்
கடிகார முள் குத்தி இடறுகிறது காலம்

ஒன்று முடிய முன்னம்
அல்லது முடியாமலே
மற்றொன்றில் தாவிப்பறக்கிறது குதிரை மனசு

வினாடிக் கீசாவில்
தேவைகளின் முடிவுறா நீட்சியை அடைத்து வைத்துள்ளது
ஆவல் பூரிக்கும் வாழ்வு
கீசாவைத் திறக்கும் போதெல்லாம்
மாபிள்களாய்ச் சிதறியோடுகின்றன
நிறக்கனாக்கள்

ஒவ்வொன்றாய்ப் பொறுக்குகையில்
மேலும்
நேரத்தைத் துரத்துகிறது நேரமின்மையின் பயங்கரம்

எனினும்
வண்ணத்துப் பூச்சியொன்றை பிடித்துச் சிலிர்க்கும்
குழந்தை விரல்களில் சந்தோசம் வழிவது போல
பொழுதுகள் எனக்குள் லாவண்யம் காட்டும்

2011 மார்ச் 11

## குழிவெட்டுபவனின் புராணக் கதை

பால் முகம் வற்றாப் பால்யத்தில்
குழி தோண்டுகை தொடங்கிற்று
வித்தொன்றையோ கன்றொன்றையோ இட்டு
வளர்த்தெடுத்தலில்
ஒளிக்கீற்றாயும் வற்றா நீர் வார்ப்பாயும்
அவன் ஆதிக் கனாவிருந்தது

குழிகளில் நிரப்பியே
பெருவிருட்ஷ சமூகமொன்றின் நிழலுக்கு
வேரோடினான் துடிக்கும் இளங்காலத்தில்

யௌவனத்தின் ஒளி
குழிவெட்டுபவனின் கனவுகளில் வழிந்தது

அகலித்த குழிகளில்
தன் சமூகத்தின் வலிகளையும்

துயர் கவிந்த காலத்தையும்
அள்ளிப்புதைத்திடல் வேண்டுமெனக் கூவினான்
அவனது குழிகளில்
அவனது அவா பொங்கிற்று
மதியம் கடந்த வட்சரத்திலும்
குழிகள் வெட்டும் அவன் ஓய்ந்திடவில்லை
மனசில் தழும்பேறி குழிகளாய் பெருகின
அவை பொறி கிடங்குகளாய் வளர்ந்தன
மேலால்
வாசம் பூசிய நச்சு வாரத்தைகளைப் பரவினான்

மேலும் பொறிகள் பெருகின
வதைபட்டுச் சிதைபட்டது
அவனின் ஆதிக் கனாச் சமூகம்

பாவம்
அவனுக்குப் புலப்பட்டதில்லை
வெட்டிய குழிகளில்
அவனது சுயம் நிரம்பி வழிவது குறித்து

2011 ஏப்ரல் 25

**சொல்லில் உறைந்து போதல்**

●

நுரைத்து நுரைத்து வழிகிறது
பருகிக் களிக்கிறேன் காலக் கோப்பையில்
என் வல்லபங்களைப் பிழிகிறது
அது
இன்னும் தான் புரிதலுற்றுப் போகிறேன்
நுரைத்தலின் மாயா ஜாலங்களை

2011 மே 01

# பனிமொழியில் உறையும் பறவையின் நாளைய பாடல்

நான்
திசை புதிதாய் உந்திப் பறக்கும்
பறவை வானம்

ஈரம் சொட்டும் என் பாடல் மீது
நாளைக்கான புதிய அர்த்தங்களை
தேடல் தொடங்கிற்று காலம்

புராதன காலக் கல்வெட்டிலும் செப்பேட்டிலும்
ஓலைச்சுவடியிலும் புதிதாய் கணினியிலுமாய்
எனக்கான சிறகுகளைச் செதுக்கியே
பறத்தல் தொடர்கிறது

என்னை உயிர்த்த ஆதி மொழியும்
உறைந்து போயிற்று பழஞ்சாசனத்தில்

நான்
என்னை உயிர்த்து வானம் அவாவும்
இறக்கைகளை மீள வரைதல் தொடங்கினேன்
புதிய மெருகாய் இறக்கைகள் வளரவும்
பேனாவின் கூர்முனை துடித்தது

கல்வெட்டில் படிந்து கணினி வெளியில்
மின் எழுத்தாய் உந்திப் பறந்தேன்
வானம் விரிய என் சிறகுகள் நிறைந்தன
ஆதி வேரின் ஈரம் கிளைத்துத்தூவ
என் பாடல் மீது
மேலுமாக மலர்ந்தன
மொழிகளற்ற மொழியின் சொற்கள் பூக்களென

சொற்களைக் கொறித்து மீளவும் விதைக்கிறேன்
புதிது புதிதாய் அர்த்தங்கள் விளைகின்றன அடர்வனமாய்

நான்
திசை மேலும் உந்திப் பறக்கிறேன்
என்னில்
நான்களாகிக் கிளைத்து

2011 மே 10

## நான் எறும்புகளின் இனிப்பு

எறும்புகள் வெளிப்படத் தொடங்கின
புற்றுகளிலிருந்தும் சுவர் இடுக்குகளிலிருந்தும்
எறும்புகள் என்னை மொய்த்துக் கிடத்தலில்
பூரித்திருந்தன
பூரித்தல் கண்டு
மேலும் என்னில் எறும்புகள் பெருகின
செத்த எலியில் மொச்சம் பிடித்தவையும்
யாரோ கழித்த மலத்தில் குந்தியவையும்
அழுகிக் கிடந்த கனியின் நாற்றத்தில் ஊறியவையுமாக
எறும்புகள் என்னை நோக்கி மேலும் வியாபித்தன

நான்
இனிப்புச் சிறு துண்டாய்க் கிடக்கிறேன்
தமது லாவகமாய் என்னை நகர்த்தியே
மகிழ்ந்திருந்தன மேலுமான எறும்புகள்

சிறுகற் துண்டுகள் எறும்புக்கும் பயனற்று
சிதறிக் கிடக்கின்றன என்னைச் சூழவும்
எனினும்
எறும்பின் மகிழ்தலை ஆசிக்கும்
சிறு பருக்கை இனிப்பு நான்

2011 ஜூன் 27

●

மனசைச் சுற்றின முட்கள்
ஒவ்வொன்றாய் அகற்றுதலே
வாழ்வென்றானது
முட்களைப் பிடுங்கியபடி நடக்கிற வழியில்
மீளவும் விதைக்கின்றன புதிய முட்கள்
கடைசி முள்ளையும் எடுத்திடலாம்
நம்பிக்கையுடன் கடந்து வருகிறேன்
அடர்வனம்

2011 ஜூலை 06

●

ஆரஞ்சுப் பழத்தை பிழிகையில் வழிவதிலில்லை
எனது கவிதை
ஆப்பிளைக் கடித்த
துண்டின் சுவையிலில்லை எனது கவிதை
பூவிதழில் வடியும் தேன் துளியிலுமில்லை
அதிகாலையாய் விடியும் கதிரில் தேடிப் பார்க்கலாம்
எனினும்
எனது கவிதை
ஆழ்துயரினடியில் உறைந்து கிடக்கிறது.

2011 ஜூலை 11

## தூசு

தூசுகளாலான வாழ்தல் குறித்து
துவண்டு போகிறது
என் கவிதை மனசு

இன்னும் தான்
நேற்றைய தூசு படிந்த வெளியில்
புதிய தூசு அலைகிறது
யன்னலை விரியத் திறந்து கொண்டும்
கதவிடுக்கில் சாவி கொடுத்தபடியும்
கூரையிலும் சுவர்களிலுமாக பழையபடி
கோட்டோவியங்களை வரைந்து
கலரடிக்கிறது புதிய தூசுகள்

தாழிட்டு உள்ளிருக்கும்
சுழல் நாற்காலியில் வீற்றிருக்கும்
உயிர்ச் சிலையில் படிந்தன தூசுகளின் படை

சிலையின் உருவம் சிதைந்து போனது குறித்து
சிலையாகிப்போனது காற்று

முகங்களில் வளர்ந்த தூசுகள்
இறுக மூடிய கதவிடுக்கிலும்
சாவித் துளையிலுமாக
படரத் தொடங்கின
கணம்
சிலை துடித்தெழுகிறது

உள்ளிருந்து அதிகாரத்தின் குரலாக
கர்ஜித்தபடி அலைகிறது
நான்

என் மனசில் மீளப்படிகிறது
புதிய தூசு

2011 ஆகஸ்ட் 09

## அடைக்கும் தாழ்

"அன்பு என்பது என்ன?"
மாணவன் கேட்டான்
"அன்பு...
இரக்கம், கருணை, காருண்யம், பற்று, பாசம், நேஸம்"
ஆசிரியர் ஒத்த பொருளில்
சொல்லிக் கொண்டே போனார்
"அப்படியென்றால்?" தாகத்தோடு
மீண்டும் கேட்டான் மாணவன்

"அப்படியென்றால்
கோழி குஞ்சுகளை
தன் இறக்கைக்குள் பொத்தி வைத்திருப்பது போல

குரங்கு தன் குட்டியை
வயிற்றில் பற்றிக்கொண்டு தாவுவது போல
ஒரு காகம்
மற்றக் காகங்களைக் கூடியழைத்து
பங்கு வைத்து உண்பது போல
எலியும் பூனையும் பூனையும் நாயுமாக
சேர்ந்து விளையாடி மகிழ்வது போல
தாய் குழந்தை மீது கொண்டுள்ள
இரத்தமும் பாலும் கலந்த உயிர் உடல் போல
சொல்லிக்கொண்டே போனார் அவர்

அவரால் சொல்லவே முடியவில்லை
அன்பு என்பது
"நான் உன் மீது சுரக்கும் பரிவு"
என்பதாக

2011 ஆகஸ்ட் 19

## மேய்ந்து திரிகிற காடு

வனமெடுக்கும் என்சிறு காடு
மேய்ந்து மேய்ந்து அலைகிறது
மனசு
முன்னர் காட்டில் நுழைகையில்
மரமும் செடியும் கொடியும்
உயிரிகளுமாய் உலாவியிருந்தேன்
மேய்ந்து களைப்புற நிழலிருந்தது
திரும்பி வரும் திசையும் தெளிவிலிருந்தது

மேய்ந்தபின் அசை போடப் பொருள் வளர்ந்தது
மேய்ந்து மேய்ந்து கொளுத்த பொழுது
பழுத்துத் திமிறிய இன்சுவையாய் பரந்திருந்தது மனசு

அது சிறு காட்டுக்காலம்
காடனாய் நான் கனவுற்றுக் கருவுற்றேன்
பின்னர்
வனமெடுத்தது அகல் காடு

காடுகள் வனங்களை ஈன்றன
வனங்கள் மகா வனங்களை காத்தன
காடுகள் காடுகளோடு முரண்டன
வனமெடுத்த ஒலிகளில் பயமுற்றேன்
வனத்திடை புதுத்திமிரோடு நிமிர்ந்தன
பெயரும் வேரும் புரியாத புதுமரங்களும்
மரத்தடி நிழலுமென

நுழைந்த திசை தெரியாது உள் அலைகையில்
கண்கள் குருடின
இருட்டு நிறத்தை அள்ளிப் பூசி
கால்களும் இடறின

மேய்ந்து திமிறியபடி
வனமெடுக்கும் அகல் காட்டில்
துடிதுடித்துச் சாகிறது மனசு

2011 ஆகஸ்ட் 25

## நான் நதியாகி நடத்தல்

நீர்ச் செறிக்கும் கீசா
திறக்கவும் நீர் பெருத்தோடும் கிளைநதி

அள்ளிப்பருக நெடுந்தாகத்தோடு
பல கைகளும், கைகளற்ற அவாவுகையும்
தாகமிடறுகளும் காத்திருக்கும் பொழுதுகள் நீள
நான்
நீர்ச் செறிக்கும் கீசா

தாகமடங்கா வெளியில்
எவர்
எவர்வசம்
இரத்தல் முடியும் சிறுதுளி

எல்லோரதும் எதிர்பார்க்கைகள் தொலைகின்றன
நதி
கீழே இறங்கிவரும் நானாகி

மூங்கிலின் ராகமெடுப்பும் குளிர் தென்றலின் இனிமொழியுமென
மயில் இறகு சிலிர்க்க குயிலிசைக்கும்
சோலை வனப் படுக்கையில்
கீழே இறங்கி வரும் நதியல்ல
நான்
அடிசுட வரண்டு
தாகமெடுக்கும் நதி
என்னில் பருகிட மேலும் தாகிப்புகள்
தவமியற்றும்

நான் நீர்ச்செறிக்கும் கீசா
மெள்ளத் தட்டுண்டு உடைந்து கிடக்கிறேன்
ஒரு துளி வழிகிறது

மேலும்
எனதும் அவர்களதும் தாகிப்புகள்
வேகித் துடிக்கின்றன

நான் நதியாகி நடக்கிறேன்

2011 செப்டம்பர் 27

## அந்நியமாதல்

என் புன் சிரிப்பை
எவர் வசம் சொரிதல் முடியும்
புலன்கள் இறுகி முகமற்ற முகங்களாய் அலையும் வெளியில்
நான்
விழிகளில் நுரைக்கும்
மெல்லிய புன்னகையுடன்
யாரை நோக்கி வருதல் சாத்தியம்

பொழுதுமற்ற பொழுதாய்
உணர்வற்றுக் கரைகிறது காலம்

காகம் சிறு கிளையில் குந்திக்கரையும்
குறுங்கணம்கூட
வாய்க்காத அலைச்சலின் வேரில்
நானுமாகி இறுகிப் போகின்றேன் இப்பொழுது
மீண்டுமாகி
முகமற்ற முகங்களாய்
அலைகிறது காலம் தூசு

நாளையும்
என் மழலையரின் குறுஞ்சிரிப்பும் நானுமாய்
வசமற்றுப் போதல் கூடுமெனில்
கனவாகி அலையும்
காலமும் நானுமாய்

2011 ஒக்டோபர் 16

யன்னல் கண்ணாடியில்
வரைகிறாய் காலைக் காட்சி

உன் அலகு ஸ்பரிசிக்கும்
மெல்லிய நாதத்தில்
நீந்துகிறது குழந்தை மனம்
மணிகள் சிதற அள்ளிப் புதைக்கிறேன்
அதன் கலகலத்தலை மார்பில்

நாளைக்கும் வரைதல் அவாவி
விம்பமாய்க் காத்திருக்கின்றன
கண்ணாடியில் ஆயிரம் காலைகள்
குழந்தையும் குருவியுமாக
இரவுகள் இனித் தொலைந்தன

2011 நவம்பர் 04

## என்னைத் துரத்திய சாத்தானின் மரணம்

வண்ணத்துப்பூச்சிகள் சிறகெடுத்தன
தேனருந்தும் நீல வண்டுகளும்
என்னில் மொய்த்து பறத்தலில் மிதந்தன
பூங்காவனமியற்றியது யௌவன நாட்கள்

நாட்கள் மீதேறி
என்னுள் புகுந்து வியாபித்தாய்
என்னை என்னால் வெளியெறிந்து
அதிகாரத்தொனியெடுத்தாய்

நீயே
கனவுகளுக்கு நிறமூட்டுவதாயும்
கால்களுக்குத் திசையெழுதுவதாயும்
என் உணர்வுகளுக்குள் ஊர்ந்து திரிகிறாய்

என்னது அழகிய முகம் அழிய
நிறத்துக்கு நிறம் மாறும் வேறும்
முகங்களை அணிவிக்கிறாய்

நான்
சர்வமும் அடங்கியுறைய
எனக்குள்
காண்டாமிருகங்களையும் கழுகுகளையும்
திணித்துவிட்டுத் திமிறுகிறாய்
சிலபோது
கரடிகளையும் கருங்குரங்குகளையும்
ஏவி விட்டு விடுப்பும் பார்க்கிறாய்

ஒரு
வெள்ளைப்புறாவின் சிறகு நுனியில்
ரத்தம் சொட்ட
உன் கூத்தின் அர்த்தப்பாடு குறித்து
காலத்திடம் இரந்து கிடக்கிறேன்
நான்

என்னைத் துரத்திய சாத்தானின் மரணம்
எனது காலடியில் நிகழ்கிறது

2011 டிசம்பர் 31

துமி
தூறலாகி
துளியாகி விரிகிறது பெருமழை
அருவியாகி ஆறாகி நதி நீள நடந்து
மாக்கடல் பொங்கிற்று
மனசுக்குள் அடங்கா வெறி

ஆதி முத்தத்தின் எச்சங்களை
அவாவியபடி நடக்கிறது ஈரச் சுவடுகள்

நீ தொடாத் தூரத்தில்
நினைதலில் ஊறியது வானம்

2012 ஜனவரி 01

## காலம் குறித்து மூன்று குறுங்கவிதைகள்

01. அசைந்து அரற்றினாய்
காற்றைக் கிழித்ததில்
காற்றிலிருந்து வழிகின்றன பெருந்துயர்
பெருக்கியபடி நடக்கிறது
காலம்
காலில் சிறு பூவேனும் இல்லை
உன் வார்த்தைகளிலிருந்து உதிர்கின்றன

02. சந்திரனும் சூரியனுமல்ல
நியதிகள்
மாறக்கூடியன என்கிறாய்
மாற்றுவதன் மூலம்
சந்திரனும் சூரியனுமாய்
நித்தியமாதல் அவாவுகிறது உன் மனம்
அறிந்துகொள்
சந்திரனும் சூரியனும் கூட
அருகி விடுவன

03. அனலை விதையிடுகிறாய்
மேகத்தை இழுக்கிறாய்
நீரால் நிரம்புகிறாய்
காற்றால் காலிடுகிறாய்
பூமி
உன்னைச் சுற்றுவதாக இரைகிறாய்
மூன்றாம் முறையும்
உதிக்கும் சூரியனுக்காக
வெந்தழிகிறது
காலம்

2012 பெப்ரவரி 28

மகன்
நொங்கு வண்டியை உருட்டி விளையாடினான்
பலாச்சருகு குவிந்த
ஒற்றையடிச் சரசரப்பில் உருண்டது வண்டி
மகனின் மகன்
எலக்ரோனிக் காரை ஓட்டிச் சிரிக்கிறான்
பளபளக்கும் மாபிள் தரையில்
வழுக்கும் கார்
மின்சாரம் தீர்ந்து போக
அவனில் கண்ணீராய் உதிர்கிறது
மகனின் மகனின் மகன்
இனி பறக்கும் காரையோ தட்டையோ
கிருமிகளினாலான கருவியையோ
சிறகு முளைத்துச் செலுத்தலாம்

மூவரும் சங்கமிக்கும் புள்ளியை
எண்ணித் தோற்றுப் போகிறேன் நான்

2012 மார்ச் 22

## தாயன்பைப் பாடுதல்

அதிமென்மையாய் காற்றும் வீசுகிற
அதிகாலைப் பொழுதொன்றில்
என் ஈரச் சிறகுகளை இழந்து போகிறேன்

பறத்தலற்ற பரிதவிப்பில் கிடந்து
துடிக்கையில்
இழத்தலின் வலி
இதயத்தை நொருக்குகிறது
பொறுமை இழந்து போகாத தாயன்பின் ஈர்ப்பில்
என் கால்களும் காலங்களும் கிடந்து சுழல
மீள மீள மொய்க்கிறது
நினைதல் அழியா மனம்

இதயத்தின் இழைகளில்
உயிர்ப்பாய் உள்ளவளே

மென் பூச் சொரியும் இன் சொற்களால்
மனசில் எப்போதும் பொத்தியே வைத்திருக்கிறேன்
உனக்கேயான பூங்கவிதையொன்று
பூப் பஞ்சுச் சிறகு போல
தாயே
பாலும் பழமும் பிசைந்தூட்டிய அமுதே
உன் விரல் இடுக்குகளில் ஊறிய
ஈகையின் அதிசுவையும்
ரேகைபோல ஒட்டிக் கிடக்கிறது

நீ
போர்த்தி விட்டுப்போன பொறுமை
கவசமாய் என்னுள் உயிர்க்கிறது

**சொல்லில் உறைந்து போதல்**

நீ
சொல்லாமலே சொல்லி விட்டுப்போன
மௌனத்தின் அர்த்தங்கள்
என்னுடன் தேடலாய் விரிகிறது

நீ
ஆழ்மனசில் செதுக்கி வைத்த அன்பு
பரிவாய் என்னில் சுரக்கிறது

தாயே
உன் மீதெழும் வியாபித்த நினைவில் வழிகிறது
கருணை ஈரமூறி

2012 ஜூலை 18

(2012.07.18 அன்று வபாஅத்தான என் அன்புத்தாய் மர்ஹூமா ஸரிபா உம்மா அவர்களின் ஈரமான அன்பின் நினைவுகளோடு எழுதப்பட்டது)

**சொல்லில் உறைந்து போதல்**

## மனம் தேக்கம் காடு

திரும்பவும் பற்ற வைக்கிறாய்
பற்றியெரிகிறது தேக்கம் காடு போல மனசு

காய்ந்து சருகாய்
தசாப்தம் ரெண்டில் அள்ளுண்டு
அலைந்து வீழ்கையில்
பூர்வீகத்தின் சிறுதுண்டு நிலத்தில்
மீள வேர் பாய்ச்சும் துளிர்வாய்
மனம் புதைந்திருக்கும் அவா மனசு நிறைய

முள்ளியவளை எனதின்
முகவரிச் சொல் மட்டுமல்ல
நான்
காற்றாயும் கனவாயும் கலந்திருந்த மண்மடியும்

காய்ந்த சருகாய் வந்து வீழ்கையில்
வசமிழந்து வதைவுறல் எங்ஙனம்

நம்பிக்கையும் தீய்ந்து எரிகையிலும்
ஆதித்துயர் கவ்விக்கிடத்தல்
இனிச் சாத்தியமில்லை

சொல்
புரிதலற்ற வன் காலத்தில் தானே
அவஸ்தைகளின் குழிகளில் நிரம்பி வழிந்தன
நமது நீள் உறவும் உரிமைகளும் உணர்வுகளுமாய்
வாழ்தல் என்பது அர்த்தங்களற்று

மீளிணக்கப்பாடு
எனதும் உனதுமான எம்மவர் சந்ததிக்குமாக
எஞ்சியிருக்கும் பொழுதுகளையாவது
ஆதிவேரின் நம்பிக்கைகள் கொண்டு
இனி நிரம்புதல் வேண்டும்

2012 ஆகஸ்ட் 08

(பூர்வீக பூமியில் மீளக்குடியேறிய முல்லைத்தீவு முஸ்லிம்களின் தேக்கம் காட்டுக் குடியேற்றம் சில விஷமிகளால் தடுக்கப்பட்ட சம்பவத்தையொட்டி எழுதப்பட்டது.)

# என் மீது ஏவப்பட்ட பிசாசுகள்

என் மீது பெரும் பிசாசுகளை
ஏவியிருக்கிறது காலம்

விஷம் பூசிய வார்த்தை அம்புகள்
கொடுந் தேளெனக் கொட்டுவதாயும்
ஆயிரத்துச் சொச்சம் கடும் விழிகள்
வஞ்சிக்கப்பட்ட சுலோகங்களோடு அலைவதாயுமான
பொழுதின் மீது
மீளவும் பெரும் பேய்கள்
குந்தியிருந்து குதூகலிக்கும்

கூழ் அடுதலில் பிசாசுகள்
புதிய பரணி பாடுகின்றன

என் அதி மௌனத்தின் மீது
அடுப்பு மூட்டுகின்றன
எனதான வினையாற்றுகையைக் கடாரமிடுகின்றன
என் எண்ணங்கள் எத்தகையவை
என் நோக்குகள் போக்குகள்
எனதான காரியங்கள் காரணங்கள்

என் விருப்பின் மீதான வெறுப்புகளுமாக
கூழ் இடுகின்றன மனங்கொதிப்பாக

என்னைச் சுற்றியே எப்போதும் ஏவப்படுகின்றதான
பிசாசுகளின் கூத்து கூழில் பொங்கி வழிகிறது

என் உணர்வுகளை மதிப்பாரில்லை
உன்னதங்களை நேசிப்பதற்கும் எவருமில்லை
வஞ்சனை பொங்க முகஸ்துதி சுயநலம் கலந்தொரு
பொங்குதலில் பூரிக்கின்றன பேய்கள்

கூழ் பொங்கலிடும் பரணிப்பிசாசுள் அறியட்டும்
கூழில் சீழாய் வடிவது
பிசாசுகளின் கறைபட்ட கரங்களின் ரத்தங்கள் என

என் மீது ஆக்கிரமிப்பை நிகழ்த்தும்
பிசாசுகளே அறிக
மூட்டிய தீயில்
என் மனசு பிரகாசிப்பது பற்றி
அதன் அர்த்தங்கள் மேலும் பூரிப்பது பற்றி

2012 செப்டெம்பர் 16

# எச்சங்களில் உயிர்க்கும் கவிதை

என் மண்ணினது நிறம் அவாவி
சிறகு முளைக்கிறேன் விரியும் வெளியில்
ஆதித் தடங்களில் நீள்கிறது அழிவுற்ற சரித்திரம்
வீதிகளும் திக்குகள் தெரியாது
சுருண்டு மிருளுகின்றன

குந்திக் குதூகலித்த பராயத்துப் பெயரறியா மரங்கள்
கிளைகள் இழந்தன
முடம்பட்டுத் துடித்தன பூவும் காயுமான உணர்வுகள்

உள்ளே நுழைந்திருந்தலில்
முகடொடிந்த வீட்டின் இடிபாடுகளிடை உயிர்த்தன
வேலிகளுமற்று எல்லை இல்லா முரண்களும் விதைத்தன

கிணறுகளும் தூர்ந்தன
அள்ளிப்பருகிய இளந்தண்ணீரின் சுவை
அடி நாவில் ஒட்டிக்கிடந்து துடித்தது
மீளவும் தாகிப்பு

காடு மூடிய ஊருக்குள் முள் கிழித்த
கால்களில் வழிகிற ரத்தத்தில்
சிறகு தோய்த்துக் கவிதையொன்று முளைத்தது

இனியும் இழப்பதற்கில்லை
குஞ்செனு அணைத்தெழல் அவா
தசாப்தங்களாய் ரத்தத்தில் மூண்ட ஊர்
என் கவிதை பட்டுச் சிலிர்க்கிறது

பல்லாயிரத்துச் சொச்சம் முடங்களோடும்
உயிரற்ற உயிர்களாய் எஞ்சியிருக்கும் நம்பிக்கையிலிருந்து
உயிர்க்கிறது நமதான எதிர்காலம்

மீளவும் மீளவும் பறத்தல் அவாவுகிறேன்
கனவுகளுக்குள் கிளைகள் பரவ
ஒவ்வொரு கிளையிலும் இலையிலும்
ஒவ்வொரு காயிலும் கனியிலுமாக
போயமர்கிறேன் ஊரின் வேரில்
என் கவிதை புதிதாய் சிறகுயிர்க்கிறது.

2012 ஒக்டோபர் 24

## நசிவுகள்

விழுதுகள் தொங்கும் விருட்ஷத்தின் நிழலில்
முற்றத்தைக் கிளறும் கோழியின் கால்களில்
நசிபடுகிறது சிறு ஆலம் பழம்

பின்வளவுப் பனந்தோப்பில்
மாடுகள் ஈத்துக் கிடக்கின்றன
பாணி ஊறிய பனம் பழங்கள்

முற்றத்துப் பூஞ்செடியில்
மல்லிகை உதிர்க்கும்
சுடு மணலில் தெருநாய் மிதித்துக் குரைத்துப் போகிறது

குழந்தைகளின் வண்ணக்கனவுகள் ஏற்றும்
வர்ணப்பட்டத்திலொன்று
முள் நிறைந்த வேலியில் முகம் விழுத்தி
பறத்தல் இழக்கிறது

நேற்று ராத்திரி வரை பெய்த மழையில்
விளக்கைச் சுற்றிய ஈசல்
கூட்டமாய்
கணப்பொழுதுக்குள் செட்டை ஒடுங்கி வீழ்கிறது

யாரோ சுவைக்க
சாறாகப் போதலுக்காய்
ஆலைவாயில் சக்கையாகிறது கரும்பு

ஆலம் விதை
பனங்கொட்டை
மல்லிகைப்பூ
வர்ணப்பட்டம்
ஈசல்
சிறு கரும்புத் துண்டு
என் மனம்

2012 நவம்பர் 14

## கடலருகு ஊரிழந்த படகு நிலக்காரன்

ஆதி நிலத்தில் உயிரோடி வேர் மண்டி நின்றது
வாப்பாவின் வாப்பாவின் கிழப்படகு

நான்
படகு திருத்தி பரவை நோக்கும் புதுப்பரதவன்
கடலிறங்க ஆவல் பொங்கினேன்

கோந்தப்பிட்டியெங்கும் பிறைத்தோணிகள் பெருக
தூரத் தெரியும் திசை தொட்டு இனி நிமிர்த்திடக் கனவுற்றேன்

ஆதி நிலத்தின் மீது உயிரோடி
மீளெழுந்த பொழுது
என் படகு நிலத்தை நீ தின்றிருந்தாய்

எனதுயிர் மண் துணிக்கைகள் மேல்
உனது ஆக்கிரமிப்பின் கால் தடயம்
சிலுவைத் துண்டுகளாய் வேர் கொண்டது
சிலிர்த்துப் போயிற்று
என் இருப்பின் மீதான இழப்பின் பரிதவிப்பு

என்னைத் துரத்திய உனது வம்சத்தின்
சதி பொறுத்தே
துயரறியும் என் மனம்
எனதான நிலத்துண்டை இரவல் ஈந்தது

இரவல் வாடி கட்டிய நீ
இரக்கமற்று
என் கடலருகு ஊர் அள்ளி விழுங்கினாய்

ஒப்பந்தம் கிழிபட்டுத் துடிதுடித்தது
படகுத்துறை மீது

உப்புக்களமாய் கரித்துக் கிடக்கிறது
என் கடலருகு ஆதியூரின் அழகு
நீ
எல்லையில் நின்று துரத்தியடிக்கிறாய்
துயரிலும் பெருங் கடல் துயரமாய்
துடுப்பற்றுத் தத்தளிக்கிறது
என் வாப்பாவின் வாப்பாவின் கிழப்படகு

எனினும்
எனதும் வாப்பாவினதும் கனவின் ஆழத்தில்
ஆதிப் படகு நிலச் சொந்தக்காரர்களின்
பிள்ளைகளின் பிள்ளைகளினது
இரத்தம் படிந்த இளம் படகுகள்
கடலிறங்கி பூரிக்கின்றன

2012 டிசெம்பர் 15

●

நெரிசலில் தொலைகின்றன கால்கள்
திக்கெங்கும் துளைத்துக்கொண்டே
ஏவுகிற அவஸ்தையை
மூடிப்பரவுகின்றன புலன்கள்
மீளக்
கண்களை மெல்ல நீவிப்பார்க்கையில்
தொலைதூரம் தெரிந்தாய் புள்ளியாய்

நெரிசலுக்குள் நிலவும் பூவும்
வதைபடச் செய்தவர் யார்
கண்களை இறுக மூடுகிறேன்

மறுபடி நிலாவென
எங்ஙனம் வரைவது

நிலாவும் நீயும் தொலைந்த பொழுதுகள்
எனக்குள் நீளுகின்றன

2013 ஜனவரி 02

## வெள்ளை நிறத்தின் மரணம்

பாலைவனத்தின் பின்னாலிருக்கும்
சிறை வாழ்வுக்கு நிச்சயமாக்கினர்
அவள்
ஆயிரம் தடவையாகவும்
சிறைக்கம்பிகளில் துயர்ப்பாடலை வரைந்து
கொண்டிருந்தாள்

துயரின் ஈரவரி பட்டு
பாலைவனங்கள் மனசும் இளகவில்லை
மேலும் கொதிப்பெடுத்தன

பானையில் பொங்கி வழியும் பாலை
அள்ளிப்பருகி மகிழ்ந்திருக்கும் வெள்ளை வயதில்
அவளை
பாலை நிலத்திற்கு நிச்சயமாக்கிற்று காலம்

பாலடைத்து மூச்சைவிட்ட பிஞ்சின் பெயராலும்
அவள் நீளவெளிச் சிறையில் மீளவும் புதைக்கப்பட்டாள்

மொழியுமற்ற அவளுக்கென
இரந்து பேச எழுந்த நாவுகளும் ஈரம் வரண்டன
எனினும் இழகவில்லை
பாலையின் கட்டாந்தரை மனசு

அவள் கணக்கற்ற நாட்களை எண்ணி
நம்பிக்கை தேய்ந்தாள்
வீடுகட்டும் நெடுங்கனா சிதைவுற்று துடித்தது அவளுடல்

சிறைக் கம்பியிலும் பல்லாயிரம் மனவெளியிலும்
எப்போதும் உறைந்து கிடக்கிறது

2013 ஜனவரி 09
(றிஸான நபீக்கின் நினைவுகளுக்காக எழுதப்பட்டது)

# அலைகளை வாசிப்பவள் பற்றிய காற்றின் குறிப்பு

அவள் பற்றிய உயிரற்ற பாடல்
ஒதுங்கும் அலைகளில் அவிழ்க்க அவிழ்க்க
பெருகத் தொடங்கிற்று உட்சுருண்ட அர்த்தப்பாடு
அர்த்தங்கிளின் மொழிபெயர்ப்பைச் சொல்லிப் புலம்பிற்று
காற்று

அவளது வாசிப்பில் கடல் தேவனானான்
ஆசிர்வதிக்கவென ஆயிரம் கைகளோடும்
அவள் மீது புணர்ந்து கிடக்க குறிகளோடும்
எழுந்து வந்தான் தேவதேவன்

அவனது காலடியில்
மீண்டும் சுருண்டு போயினாள் அவள்.

மறுபடி ஒருநாள்
கரையில் புதைந்தவள் திடுக்கிட
திருக்கடல் சர்ப்பமானது
படமெடுத்தாடல் தொடங்கவும்
நஞ்சு கொட்டுண்டு திசைகளும் நீலமாயிற்று
நஞ்சள்ளிப் பருகியே மூர்ச்சையானாள்
அவள்
முன்னமொருநாள்
மாக்கடலை ஆவல் பூரிக்க விரித்தாள்
பொங்கி நுரைத்த அலைகளில்
சிறகெடுத்துப் பறந்தது அவள் மனம்
அது குறுங்கணம் தான்

மறு கணம்
கடலை கண்ணீராய் வாசித்தாள்
அவளது விழிகளுக்குள்
ஆயிரம் கடல்கள் திரண்டன

கடலை விதியென யாரோ மொழிந்தனர்
கரையொட்டி நின்றவளை
ஆழியுள் இழுத்து நீர்ப்புதையல் செய்தது
மாக்கடல்

அவள் மேலும் சிதைந்தாள்
பிறகு எழுந்த ஒவ்வொரு அலையிலும்
அவளது ஒப்பாரியே ஒட்டியிருக்கிறது

முடிவற்ற அவளது மறு வாசிப்பில்
ஆயிரம் திமிரோடு எழுந்து நிற்கிறது கடல்

2013 ஜனவரி 25

## மரமேறிகள்

மழலையாய் வேரடியில் தவழ்ந்தவன்
சிறுவனாய் மரமேறல் தொடங்கினான்
கால்களில் சிராய்ப்புகளும்
நெஞ்சில் உராய்வுகளுமாய்
ஏறல் தொடரவும்
வட்டில் போய்
வாலிப முறுக்கோடு வீற்றிருந்தான்
நுங்கும் நுரையுமாக வியாபித்தது
காலமும்
காலத்தின் மீதான அவாவுதலும்

உச்சிச் சூரியன் அவனது தலையில் தவிக்க
இறங்கத் தொடங்கினான்
சூரியனும் கிழடுதட்டிய படி கரைந்து போனது

இறங்கிக் கொண்டிருப்பவனின்
மரத்தடியில் வெட்டப்படுகிறது
அவனுக்கான குழி

குழி நிரம்பி வழிகிறது
ஓராயிரம் ஏக்கங்களும் எதுவுமற்ற நம்பிக்கைளுமாய்

2013 மார்ச் 22

## பேரீச்சம்பழத்தின்
## முறை கேடற்ற வாக்கு மூலம்

பேரீத்தம் பழத் துண்டாய்
றமழான் பிறை கனிகிறது
அதன் சிறு துண்டும் மிடர் தண்ணீரும் கொண்டு
உபவாசத்தின் உவகை பூரித்தன மனசுகள்

அராபிய மண்ணடி வேரில் விளைந்தது
அவர்களது நிய்யத்தும் பொய்த்துப் போகுமாறு
இங்கு எவரெவர் வசமோ
பரிசுப் பெருளாய் திரள்கிறது
போதாக்குறைக்கு
விலையேற்றப்பட்டு விற்பனைத் தராசில் நிறைகிறது

நீதியின் மீஸான் தலை கவிழ

மிடர் தண்ணீரும் பேரீச்சம் பழத்துண்டும் கொண்டாவது
நோன்பு திறக்கக் காத்திருந்த மிஸ்கீன்கள்
இன்னும் தான்
பேரீச்சம்பழத்தில் திறக்கப்படாத நோன்பிருக்கிறார்கள்

பேரீத்தம் பழத்தின் பிறைத் துண்டாய் கனியும்
றமழான் பிறைக் காலத்தில்
அதன் ஒட்டு மொத்தமும் முறைகேடாய்ப்போன
கதை கேட்டு
வெட்கித்துப் போனது அது
வெட்கம் கெட்டவர்களின் நாவில் ருசிப்பதும்
கைகளில் கிடத்தலும் பற்றி

2013 ஏப்ரல் 07

●

காற்றும் மௌனித்த கணம்
சிறு சருகும் சலனமற்றுக் கிடக்க
சடைத்தெழுந்த மரத்தின் கீழ்
காற்றைக் கடத்திச் செல்கிறது
பெரும் பற்றை

மெல்லப்பரவிய மென்பனி போர்த்திய
மெய்யின் பாடல்
சூரியக் கொடியில் உலர்ந்தது

நான் எனக்குள் தொலைந்து போகிறேன்

நிலத்தைக் கிழித்துக்கொண்டெழுகிறது
நேற்றைய மழையின் எச்சமாய்
சிறு காளான்

2013 மே 20

## வர்ணங்கள் உறிஞ்சும் நிலவு

ஆச்சரியத்தில் கிடந்தன எல்லா மலர்களும்
தேனூற
வண்டு அருந்த வந்தமர்ந்த பொழுது
வெப்புசாரம் தணிய
தென்றலின் இடுக்குகளில் செருகிய குளிர்ச்சியை
வியாபித்து நீ சிறகுலர்த்தினாய்

நிலவோயாப் பழைய நெடும் பொழுதுகள்
எனக்குள் கருகத் தொடங்கின

அது வருணங்கள் உறிஞ்சும் பெருத்த நிலா

நிலவு பற்றி மூட்டப்பட்ட
புராணக் கதைகள் பலவும் படித்துப்பார்த்ததில்
நசிபடத் துடித்திருந்தது என் மென் நெஞ்சு

எனக்கென
நிலவு பொரித்ததும் பொரியாததுமான
குஞ்சுகளில் கூர்ந்து
குறுஞ்சிறகுகள் தேடினேன்

வெகு காலமாயிற்று

நீ
பொறியெடுத்துத் தீயிட்ட குஞ்சில் தானே
கருகித் தணிந்தது மகாகாடு

அது என் மனசு

சொற்களற்ற சூட்சும வெளியில்
மௌனப் பாடகன் செத்துக் கிடந்தான்
அமாவாசைகள் பெருத்தன
நிலவற்ற வர்ணங்கள் மீண்டும்
உறிஞ்சத் தொடங்கின

2013 ஜூன் 07

# அபேபாலவின் பேனா பீச்சிய புதிய புராணக் கதை

## சிறப்புப் பாயிரம்

பஞ்சசீலம் பரிமாறிய அரசதரு நிழலில் கொதிப்பு
கடவர தேவு எழுந்தருள
பக்தகோடிகள் பரவசத்தில் மூழ்கின
கட்டுக்கட்டாய் கட்டுக்கதையாய்
அபேயவின் பேனாவில் ஊறிற்றுக் கொடுந்துயர்
கொஞ்சமும் மனங்கொள்ளாப் புராணக் கதையாய்

## வீடற்றவர் காதை

சோமாவதி சைத்தியவின் முன்தெருவில்
வதிவிடமற்று அலைந்தவர் மேல்
கடவர தெய்வத்தின் பெயர் சொல்லி
திரிசூலம் ஏறிற்று நெஞ்சில் குருதியும் பெருந்துயர்
துயரம் நெடிது வழிய
புத்தரின் பரிசுத்த பாதம் படிந்த
விகாரை நோக்கி
வெட்கித்துப் போனது மூவாயிரத்து சொச்ச நாட் பெரும்
பொழுது

**வேரோடு பிடுங்கி வானில் எரித்த காதை**

வியாபிக்கத் துளிர்த்த
விருட்சத்தின் மூலவேரும் ஒடித்து
வானவெளியில் சாம்பலாய்க்கரைத்த வேள்வியிலிருந்தோர்
துயிலகத்தில் துரோகித்த கதையும் பொய்க்கதையாகுமோ
அபேபாலவின் பேனா பீச்சிற்றுப் புதுக்காதை
கொஞ்சமும் மனமேற்கா
காலத்திடை சுருண்டு வீழ்கிறது வரலாறு

**கனவு காண் காதை**

தீ மிதிப்பாய் உமிழ்கிறது பேனா தீக் கனவு
ஆருடக்காரச் சிறுவனின்
அல்லிப் பூந்தட்டில்
இப்போது மலர்கள் இல்லை மணமும் இல்லை
துர்வாசம்
அபேயவின் எழுத்தில் வடிகிறது

## புத்தபெருமானின் புனிதத்தில் கரிபூசும் காதை

ஆருடங்களும் சவால்களும் முறையீடுகளுமாய்
பரிசுத்தமான புத்த பெருமானின் காலடியில் வீழ்ந்து
கருகிற்று எழுத்து
கபிலவஸ்துவின் புனிதத்தின் மீதும்
காவி நிறத்தில் இன்னும் ஆயிரத்துச் சொச்சப் புராணங்களுக்காய்
பேனாவின் மை நிரம்பலாம்

2013 ஜுலை 05

(முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் மரணம் நிகழ்ந்து நீண்ட காலத்திற்குப் பின் அபேபால என்பவர் வெளியிட்ட கருத்துகளுக்கு எதிர்வினையாக எழுதப்பட்டது)

●

வெற்றுக் கலசமாகிக் கிடக்கிறது
ஊற்றி ஊற்றி நிரப்புகிறாய்
பொங்கிடும் ஆவலில்
பூத்துக் காத்திருக்கின்றன பூ முகங்கள்
எனினும் நிரம்புவதாயில்லை கலசம்

யாராகிலும் கண்டுகொள்ளுங்கள்
நிரப்புவதாய் பாவனை செய்வதையும்
பால் புளித்துப் போயிருப்பதும்
கலசத்தின் அடியில் துவாரங்களிடப்படுவது பற்றியும்

2013 ஆகஸ்ட் 17

## இசைத்தல் மரத்துப் போன பியானோ

இசைத்தல் மரத்துப்போன பியானோவின் நரம்புகளில்
நினைவுகள் மீளமீளச் சுண்டுகின்றன
காற்றின் அதிர்வை ஒளித்துவைத்துக்கொண்டே
நீ மெல்லிய குரலில் நாதமிசைக்கிறாய்
பியானோவின் இசையாய்
நிரம்பி வழிகிறது என் மௌனமும் கவிதையும்
இனி
மீத்துயர் கவியும் வரள்மனசிலிருந்து
நீயெதை மீட்டல் கூடும்
இசைத்தல் மரத்துப்போன பியானோவின் நரம்புகளில்
மீளவும் உயிர்ப்பதென்ன
வசீகரத்தின் லாவண்யம் பூரிக்க
நீ
மேலும் ஒரு காதை தூரம் பறக்கிறாய்
சிறகுகளும் இசைக்க யார் கேட்டல் கூடும்
கரித்துப்போன நானும் நாளும் நரம்புகளுமாய்
அலைந்து திரிகிறது
மௌனம் போர்த்திய காற்றும் காலமுமாய்
இற்றைப் பொழுது.

2013 ஆகஸ்ட் 29

## வன்முறையால் நிழற்றப்படும் பொழுது

பொழுது
எல்லோருக்கும் முன்னால்
வெள்ளைத்தாளாய் விரிந்து கிடக்கிறது
வர்ணங்கள் நிரம்பியிருக்கும் காலத்தின் குவலையிலிருந்து
ஒவ்வொருவரும் அள்ளியெடுக்கின்றனர்
வெவ்வேறு நிறங்களிலான ஒவ்வொன்றும் பலதும்

அவரவர் வசமென முகிழ்க்கும் சுயங்களைப்
பூசுதல் தொடங்குகின்றனர்
சிலரிடமிருந்து
அழகிய பூக்கள் நிலவினது சிறு துண்டு
புறாவினது சிறகின் நுனி
வேரிலிருந்து துளிர்க்கும் வியர்வையின் துளியென
ஓவியங்கள் விரிகின்றன
மேலும் பலரிடமிருந்து

கொம்பு முளைத்த கொடிய விலங்கு
புறாவைத் துரத்தும் கழுகின் கால்கள்
படமெடுத்தாடும் விஷம் பூசியதான அரவம்
ஆழிப் பேரலையின் இரைச்சலோடு எழும் பயங்கரம்
ஆயிரம் தலைகொண்டதொரு பேயென
கூத்தென நிகழ்கிறது

வன்முறை வெடிக்கிறது வெடிப்பின் வலியில்
பீறிடுகிறது ரத்த நிறத்தில் மனங்களிலும் கொதிநிலை
நீயும்
வன்முறை கொண்டு நிழற்றுகிறாய்
பெரும் பொழுது

நீ வீசியெறிந்த வலையில்
சிக்கித் துடிக்கும் சிறு மீனாய் கிடக்கிறது
பொழுதும் பொழுது மீதான
எனதான அத்தனையும்

2013 செப்டம்பர் 5

ஊதா நிறப்பூக்கள்
ஒவ்வொன்றாய் உதிர்ந்து கொண்டிருந்தன
குதூகலத்தில் பூரித்து பொறுக்கத் தொடங்கியது
மென்விரல்களில் குழந்தை
அதன் விரல் இடுக்கில்
நிரம்பி வழிகிற பூவில்
ஒரு
வண்ணத்துப் பூச்சியின் படபடப்பு

2013 செப்டம்பர் 07

## வனாந்தரங்களில் பசித்தலையும் காதல்

**அ.** வெறும் வனாந்தரவெளி
சிறு செடியுமில்லை, இலையுமில்லை, பூவுமில்லை
வெக்கை காற்றில் அனல் வீசுகிறது
சுனைகளும் வரண்டன
வெடித்த தரையில்
காலூண்றவும் ஒண்ணாத்துயர்

இலைத் துண்டையோ மிடர் தண்ணீரையோ
அவாவியபடி அலைகிறது
ஆட்டுக் குட்டி

**ஆ.** பேதங்களால் கட்டமைக்கப்பட்ட இருப்பு
அடக்கு முறை வேரோடி
நம்பிக்கை வெந்து கிடக்கிறது
மனிதமும் செத்து வீழும்
பாழ்நிலத்தில்
பசித்தலைகிறது நெடுங்காதல்

2013 செப்டெம்பர் 08

●

முரசம் ஓங்கிற்று
மோதுகை தொடர்ந்திற்று

உதிரத் தொடங்கின
கானகமும் அதி சோலைகளும்
அருவிகள் அலைகள் அலைகளினது துளிகள்
பூவினது இதமும்
புறாவினது சிறகும் சிறகினது நுனியுமென
எல்லாமும் உதிர்ந்து விழுகின்றன

முரசம் வெடிக்கிறது
குருதி தெறித்துப் படிகிறது
மூன்றாம் தசாப்தம் கடந்தும்

குருதி படிந்த தசாப்தங்களைக்
கழுவத் தொடங்கிற்றுக் காலம்
காலத்தின் கரங்களில் புது நிறக்குருதி

2013 நவம்பர் 04

# கழுத்தை நெரித்துக் கொள்பவன்

காலம் செக்கனாய்ச் சுருங்கி
கடுகதியாய் வியாபிக்கும் செக்கல் பொழுதொன்றில்
கழுத்தை நெரித்துக் கொள்பவனைக் கண்டேன்

எல்லாச் சங்கடங்களும் விரித்துப் போட்ட வலையில்
சிக்குண்டு வெளியேறத் தவிப்புற்றான் அவன்
அவனைப் பற்றிக் கவலையுறுவாரில்லை
சிக்குண்ட சங்கடங்களிலேயே தனித்தலைகிறான்

அவன் அலைவுறும் தெருவில்
முட்கள் புதிது புதிதாய் முளைக்கின்றன
திசைகள் வேறுவேறு காட்டி முடக்குகின்றன
அவனிடம் எல்லைகள் உண்டெனினும்
அலைவுறுதல் தவிர்ப்பதாயில்லை

அவனது தோட்டத்தில் பூக்களும் இல்லை
கணமென வீசும் தென்றலையும் காணோம்

அவன் வினையாற்ற முனையும் கருமங்களில்
வந்தமர்கிறது அயர்வுறும் இயலாமை
அல்லது கருமைப் பூச்சு விழுகிறது
முகமூடியணிந்து சிரிக்கும் முகங்கள்
முகமன் கூறி குழிதோண்டுகையில்
அவன் புதைவுறுகிறான்

அவன் சிரசத்தின் மேல் கல்லாய்க் கட்டி
சுமத்தப்பட்டிருக்கிறது ஒரு தொகைத் துயரப் புத்தகம்
துயரத்தைப் படித்து முடிப்பதற்காய்
வெகு தூரத்தில் மெல்லத் துளிர்க்கும்
ஒளிப்பூச்சு அவாவை நோக்கி மேலும் முயலுகிறான்

காற்று ஒளிப்பூவை உதிர்க்கிறது
அவன் மீது மேலும் படர்கிறது துயரக் கொடி இருள்

மறுபடியும் செக்கல் பெருத்த கரும்பொழுதொன்றில்
அவனைக் காணுகிறேன்
கழுத்தை நெரித்துக் கொள்ளும் அவன்
குரலடங்கிக் கிடக்கிறான்
அவன் பெரு மௌனத்தின் மீது
கருங்குரங்குகளும் தெருநாய்களும்
கழுகுகளும் கழுதைகளுமாய்
கூத்தொன்று நிகழ்கிறது

காலக் கொமுக்கியில்
புழுவாகிறான் அவன்

2013 டிசெம்பர் 11

●

தொப்பி வியாபாரி
வெயிலின் சிறையில் தப்பி
மரநிழலில் அயர்கிறான்

கூடையில்
வண்ண வண்ண தொப்பிகள்
ஒவ்வொரு குரங்கும் அணிந்து கொள்கிறது
அளவளவாக

விழித்துப் பார்க்கையில்
வெறுமையாய்க் கிடந்தது கூடை

பழைய வியாபாரியின் பாணியில்
தலையில் கிடந்த தொப்பியை
கழற்றி வீசினான்
மற்றொரு புதுக் குரங்கு அதனையும்
அபகரித்துத் தாவியது

காலிக் கூடையோடு
இப்போதும் அலைகிறான்
நவீன தொப்பி வியாபாரி

2014 ஜனவரி 01

## துப்பாக்கிகள் வர்ணந் தீட்டுகின்றன

சிவப்பொழுக செதுக்கிய ஓவியங்கள்
சாட்சியாய் அலைகின்றன

ஓவியங்களில்
மரக்கறி விற்பவர்கள்
சோற்றுப் பார்சலையும் அரை விலையில் ஈகிறார்கள்
அன்னதானமிடுகிறார்கள்
சிலபோது சிரமதானத்திலும் ஈடுபடுகிறார்கள்

ஊர்களைப் புதிதாய் வர்ணமயமாக்க
றோட்டுகள் போடுகிறவர்கள்
பாட்டுக் கச்சேரியும் வைத்துக் குதூகலிக்கிறார்கள்
அவர்களில் சிலர்
சக்கர நாற்காலிகளுக்குள் இருப்பைச் சுருக்கி
சிலையாகிக் கிடக்கின்றனர்

சிவப்பொழுக சித்திரங்கள்
சாட்சியம் சொல்லுகின்றன

இடிபாடுகளிடை செப்பனிடத் தொடங்குகையில்
ஒப்பாரிகளும் சாபங்களுமாய்
அந்தரித்து உலாவுகின்றன ஒரு யுகத்தின் சாட்சியம்

நகரங்களை நிர்மாணிப்பதாக
நிலங்களைத் தோண்டுகையில்
முன்னமொருக்கால் காலூன்றிய பொழுதில்
புதைத்த புனித எச்சங்கள்
புதிய ஓவியங்களாய்
மீளவும் சாட்சியம் சொல்லுகின்றன

2014 மார்ச் 23

●

மௌனத்தின் பூட்டுக்களால்
நா சிறைபட்டுக் கிடக்கிறது
யாராகிலும் சாவி கொடுக்கக் கூடுமெனின்
உள்ளிருந்து
உணர்ச்சிகள் நூறு பீறிட்டெழும்

அப்போதெல்லாம்
அவர்கள் கட்டமைக்கும் அதிகாரவெளி
தூசாகிப் போகும்

2014 மே 01

## உயிர்ப்பு 2

எனக்குள் மிக அதிகாலையாய் கூவுகிறாள்
இருளிலிருந்து இதயத்தை
வெளியே எடுக்க முடியாது தவித்தலைகையில்
ஒளியைப் பூசியபடி பூரிக்கிறாள்

அவள் இசைக்கும்
அன்பு கலந்ததொரு உயிர்ப் பாடலில் தான்
எனக்குள் மீளமீள விடிகின்றன
ஆயிரத்தோராவது அதிகாலையும்

குழந்தை
எனக்குள் சூரியனை ஏற்றியபடி
மீண்டும் பிரகாசிக்கிறாள்

2014 ஜூன் 27



முல்லை முஸ்ரிபா இலங்கையில்
முல்லைத்தீவு மாவட்டம் தண்ணீரூற்றில்
பிறந்தவர். மர்ஹூம்களான முஹம்மது
முஸ்தபா ஸரிபா உம்மா தம்பதியின்
இளைய புத்திரர்.

தண்ணீரூற்று முஸ்லிம் மகா
வித்தியாலயத்தில் அகரம் தொடங்கி,
முள்ளியவளை வித்தியானந்தாக்
கல்லூரியில் உயர் கல்வி கற்றவர்.
பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம்
பெற்று, கொழும்பு பல்கலைக்கழகம்,
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்,
தேசிய கல்வி நிறுவகம், மதுரை காமராஜர்
பல்கலைக்கழகம் ஆகியவற்றில்
பட்ட மேற்கல்வியைத் தொடர்ந்தவர்.

எட்டாம் வகுப்பிலேயே
இலக்கியப் பேனா பிடிக்கக்
கற்றுக்கொண்ட இவர் தொண்ணூறுகளில்
இருந்து ஈழத்து எழுத்துப் புலத்திலும்,
பல்வேறு தளங்களிலும் வினையாற்றிக்
கொண்டிருப்பவர்.

'வன்னிப் பிரதேசத்தின் முக்கிய கவிஞர்களுள் ஒருவராகக் கருதும்படி
முல்லை முஸ்ரிபாவின் முதலிருதொகுதிகளும் அமைந்தன. "சொல்
லில் உறைந்து போதல்" அவருடைய மூன்றாவது கவிதைத் தொகுதி.
அவருடைய கவிதைகள் மக்களின் இன்ப துன்பங்களைப் பேசுகின்
றன. அவருடைய சமூகம் பேரினவாதத்தினதும் குறுந் தமிழ்த் தேசி
யத்தினதும் கொடுமைகளை அனுபவித்த சமூகம். முஸ்ரிபா அக்
கொடுமைகளைப் பற்றிப் பேசுகிறார். பிற கொடுமைகளைப் பற்றியும்
பேசுகிறார். ஆனால் அவரிடம் இனப் பகையோ குரோதமோ இல்லை.
ஒவ்வொருவர் தனது துயர அனுபவங்களையோ ஆதங்கங்களையோ
வைத்து அவற்றின் அடிப்படையில் முற்றுமுழுதாகப் பிற சமூகங்களின்
மீது பழிசுமத்துகிற ஒரு போக்கு மிகுந்துவரும் ஒரு சூழலில் இவ்வா
றான ஆரோக்கியமான அணுகுமுறைகள் நமக்கு முக்கியமானவை.
முல்லை முஸ்ரிபா தொடர்ந்தும் சமூக நீதிக்காகவும் மனித இன
நலனுக்காகவும் குரல் கொடுக்க வேண்டுமென விரும்புகிறேன். அதற்
கான ஊக்குவிப்பு அவருக்கு நமமெல்லாரிடமிருந்து கிடைப்பதாக.

கவிஞர் சி. சிவசேகரம்

ISBN: 978-955-0280-03-2